**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 26 of 2025

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:1

| | | | |
|---|---|---|---|
| Name | ஆஞ்சலா | Caste | |
| Father/Husband's Name | இருதயராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை : –**

நான் நத்தம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் குடும்பத் தலைவியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். எனது மகன் வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு இறந்து போன காரணத்தினால் வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்த நான், கடந்த 21.11.2024 அன்று கடைக்கு செல்வதற்காக வெளியே வந்திருந்தேன். கடைக்கு சென்று விட்டு பொருட்களை வாங்கிவிட்டு அதே வழியில் நான் திரும்ப வந்து கொண்டிருக்கும் பொழுது, அந்த தெருவில் வசித்து வரும் தனலட்சுமி என்பவர் என்னை அழைத்து பேசிக் கொண்டிருந்தார். எனது மகன் உயிரோடு இருந்த சமயத்தில் ஜான் பால் என்னுடைய மகனை அழைத்து அவனை ஏமாற்றியது சம்பந்தமாக மிரட்டி உள்ளார். மேற்படி சம்பவம் குறித்து, நான் தனலட்சுமி என்பவரிடம் சொல்லிக் கொண்டிருந்த பொழுது, எதிரி சரண்யா என்பவர் நான் அவருடைய கணவரைத் தான் சொல்கிறேன் என்று என்னுடைய தலை முடியை பின்பக்கமாக இருந்து இழுத்தும், மற்ற எதிரிகள் கை நகங்களால் என்னுடைய முகத்தில் கீறி ரத்த காயத்தை ஏற்படுத்தினார்கள். அருகில்

இருந்த சாட்சிகள் சத்தம் போட்டு விலக்கி நான் என்னுடைய அம்மா வீட்டுக்கு ஓடி விட்டேன்.

எங்கள் ஊரில் உள்ள சர்ச் முன்பு நான் நின்று கொண்டிருந்தபோது, ஜான் பால் என்பவர் என்னை தாக்குவதற்காக சைக்கிள் பம்பை கையில் வைத்துக்கொண்டு என்னை பின் தொடர்ந்து வந்து, என்னுடைய சேலையை பிடித்து இழுத்து, என்னை தாக்க முயன்ற பொழுது என்னுடைய சித்தி கன்னி மரியாள் தடுக்க முயன்ற பொழுது ஜான் பால் சைக்கிள் பம்பால் அவருடைய கையில் தாக்கி அவருக்கு எலும்பு முறிவு காயத்தை ஏற்படுத்தினார். அங்கிருந்து காயப்பட்ட நானும் என்னுடைய சித்தியும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்த பொழுது எங்கள் ஊரில் உள்ள தலைவர்களின் சிலை அருகே வந்து கொண்டிருந்த பொழுது பின் தொடர்ந்து வந்த எதிரி ஜான் பால் என்னை அவர் அணிந்திருந்த செருப்பால் மாறி மாறி தாக்கினார். இது சம்பந்தமாக நத்தம் பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்தை என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் தாக்கியதில் எனக்கு அவமானம் ஏற்பட்டது. எனக்கும், எனது சித்திக்கும் ஏற்பட்ட காயத்துக்காக திருவல்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். எதிரிகள் சரண்யா, சசிகலா, செபஸ்தியம்மாள் மூவரும் என்னை தேவடியா என்று திட்டி, என் குமட்டில் குத்தினார்கள். எனக்கு அவமானமாக இருக்கிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இரமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 26 of 2025

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:2

| Name | **கன்னிமரியாள்** | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | **தாவீது** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை : –**

நான் நத்தம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 21.11.2024 அன்று சேமிப்பு குழுவில் சேமிப்பு கட்டணம் கட்டுவதற்காக சர்ச்சுக்கு முன்பாக நான் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது அ.சா.1 கடைக்கு சென்று விட்டு திரும்பி வரும்பொழுது ரத்தக்காயத்தோடு திரும்பி வந்தவரை என்ன நடந்தது என்று நான் கேட்டேன். அதற்கு அவர் சரண்யா, செபஸ்தியம்மாள் மற்றும் சசிகலா ஆகியவர்கள் அவரை தாக்கி காயப்படுத்தியதாகவும், அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு என்னிடம் கூறினார். அப்பொழுது அங்கே வந்த எதிரி ஜான்பால் கையில் சைக்கிள் பம்பால் வந்தவரை நான் தடுக்க முயன்ற பொழுது என்னுடைய வலது கையில் அவர் அடித்துவிட்டார்.

அங்கிருந்து நானும், அ.சா.1ம் மருத்துவமனை செல்வதற்காக ஊரில் உள்ள தலைவர்கள் சிலை அருகே சென்று கொண்டிருந்த பொழுது பின் தொடர்ந்து வந்த

எதிரி ஜான்பால் செருப்பால் என்னை தாக்கினார். எதிரி சரண்யா அ.சா.1ன் சேலை மாராப்பை பிடித்து இழுத்தார். சாட்சிகள் சத்தம் போட்டு விலக்கினார்கள். என்னை தேடி வந்த என்னுடைய மகளையும் எதிரிகள் வீடு வரை விரட்டி சென்றுள்ளார்கள். எதிரிகள் தாக்கியதில் எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. அதற்காக நான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். வழக்கு சம்பவம் சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இரமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 26 of 2025

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:3

| | | | |
|---|---|---|---|
| Name | **மெர்லின்** | Caste | |
| Father/Husband's Name | **ராஜா** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை : –**

நான் நத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்பத் தலைவியாக இருந்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய பெரியம்மா மகள் மற்றும் அ.சா.2 என்னுடைய அம்மா ஆவார்கள். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். எதிரி ஜான் பால் என்னுடைய அக்காவின் சேலையை பிடித்து இழுத்து சர்ச் முன்பு வைத்து அடித்தார் என்னுடைய மகனை என்னுடைய அம்மா வைத்திருந்த காரணத்தினால் சண்டை நடைபெற்ற விவரம் தெரிந்து என்னுடைய மகனை அழைப்பதற்காக நான் சர்ச் வழியாக சென்ற பொழுது, எதிரி சரண்யா எதிரி ஜான்பாலிடம் என்னை தாக்குமாறு தூண்டி விட்டதன் பெயரில் அவர் கையில் வைத்திருந்த சைக்கிள் பம்பால் என்னை தாக்க முயன்று என்னை நோக்கி எறிந்த பொழுது நான் விலகி, சம்பவம் குறித்து எனது அப்பாவிடம் சொல்வதற்காக சென்றுவிட்டேன். என்னை தாக்குவதற்காக எதிரிகள் என்னை துரத்தி வந்தார்கள். என்னுடைய அம்மாவை தாக்கி எலும்பு முறிவு காயம் ஏற்படுத்தி, எனக்கு உயிர் பயத்தை ஏற்படுத்தினார்கள். அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இரமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு